**செய்தி வெளியீடு எண்: 191** **நாள்:31.05.2021**

## செய்தி வெளியீடு

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றில் உள்ள வடக்கு கோடை மேலழகியான் கால்வாய் (2260 ஏக்கர்), தெற்கு கோடை மேலழகியான் கால்வாய் (870 ஏக்கர்), நதியுண்ணி கால்வாய் (2460 ஏக்கர்), கன்னடியன் கால்வாய் (12500 ஏக்கர்), கோடகன் கால்வாய் (5048 ஏக்கர் - கண்டியப்பேரி குளம் வரை), பாளையங்கால்வாய் (5974 ஏக்கர்– தாமரைகுளம் வரை), திருநெல்வேலி கால்வாய் (4168 ஏக்கர் – வண்ணான்பச்சேரிகுளம் வரை) மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள மருதூர் மேலக்கால் (11807 ஏக்கர் – நொச்சிகுளம், கீழபுதுக்குளம், முதலைமொழிகுளம், வெள்ளரிக்காயுரணிகுளம் மற்றும் தேமாங்குளம் நீங்கலாக), மருதூர் கீழக்கால் (7144 ஏக்கர் – மேட்டுக்குளங்கள் நீங்கலாக), திருவைகுண்டம் தெற்கு பிரதானக்கால்வாய் (12309 ஏக்கர் – ஆவுடையார்குளம் மற்றும் எல்லப்பநாயக்கன்குளம் நீங்கலாக) மற்றும் வடக்கு பிரதானக் கால்வாய் (10538 ஏக்கர்– கோரம்பள்ளம்குளம் நீங்கலாக) ஆகிய பதினோரு கால்வாய்களின் கீழுள்ள 75078 ஏக்கர் பாசனப் பரப்புகளுக்கு 01.06.2021 முதல் 15.10.2021 வரையிலான 137 நாட்களுக்கு கார்பருவ சாகுபடிக்கு பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது.

**அரசு கூடுதல் தலைமை செயலாளர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**